Name : ____________________ (    )    Class : 5 (    ) /5TL (    )

PRIMARY SCHOOL

SECOND SEMESTRAL ASSESSMENT

# TAMIL LANGUAGE PAPER 2

## PRIMARY 5

## (BOOKLET A)

Additional material: Optical Answer Sheet (OAS)    **Total Time for Booklet A and B: 1hr 40min**


**INSTRUCTIONS TO CANDIDATES**

1. Write your name and class at the top of this page.
2. Do not turn over this page until you are told to do so.
3. Follow all instructions carefully.
4. Answer all questions.
5. Shade your answers in the Optical Answer Sheet (OAS) provided.

This booklet consists of 9 printed pages.

## வினா 2

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை/கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| வானம் இருண்டுக்கொண்டிருந்தது | கனத்த மழை |
| குடையை எடுத்துச்செல்ல | குடை இல்லாமல் |
| பேருந்தில் | காத்துக் கொண்டிருந்தனர் |
| மழை பெய்ய | பள்ளிப்பையை |
| பேருந்து நிறுத்துமிடம் | சறுக்கி விழ |

Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

‘அ’ பிரிவு

*A1 வேற்றுமை உருபு*

*Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS, விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)*

ஓர் ஊரில் ஒரு காய்கறி வியாபாரி இருந்தாள். (1) ______ பெயர் சிங்காரி. சிங்காரி தினமும் காய்கறித் தோட்டங்களுக்குச் சென்று வர, ஒரு (2) _______ வைத்திருந்தாள். சிங்காரி வியாபாரத்தில் அதிகப் பணம் சம்பாதித்தாலும், ஒரு வெள்ளியைக்கூட, தர்மம் செய்யமாட்டாள். ஆனால், சிங்காரியின் கணவன் சிங்காரம், அவளது (3)_______ எதிரானவன். சிங்காரம் தன் (4)________ குணத்தை மாற்றப் பாடுபட்டான். (5)________ எண்ணம் வீண் போகவில்லை. நாளடைவில் சிங்காரி மனம் மாறினாள். ஒரு முறை, (6)________ தீப்பற்றியது. நல்ல வேளை! சில ஏழை வாடிக்கையாளர்கள், அவளைக் காப்பாற்றினர். அன்றிலிருந்து, சிங்காரி, தனது கருமித்தனத்தை விட்டுவிட்டாள்.

1.
1. அவளை
2. அவளுடைய
3. அவளால்
4. அவளுக்கு

( )

2.
1. மாட்டு வண்டியை
2. மாட்டு வண்டிக்கு
3. மாட்டு வண்டியால்
4. மாட்டு வண்டியின்

( )

3.
1. குணத்தை
2. குணத்தால்
3. குணத்துக்கு
4. குணம்

( )

4.
1. மனைவிக்கு
2. மனைவியை
3. மனைவியால்
4. மனைவியின்

( )

5. 1. அவனுக்கு
2. அவனது
3. அவனால்
4. அவனே

( )

6. 1. சந்தைக்கு
2. சந்தையில்
3. சந்தையை
4. சந்தையால்

( )

## *A2 செய்யுள் / பழமொழி*

*Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS, விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.*
*(12 மதிப்பெண்கள்)*

7. மோப்பக் குழையும் ______________ முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

1. செவிச்செல்வம்
2. அனிச்சம்
3. துரும்பும்
4. நோக்கும்

( )

8. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே ______________ சினம்.

1. வெல்லும்
2. கொல்லும்
3. பழிக்கும்
4. அழிக்கும்

( )

9. நிறைகுடம் ______________ தளும்பாது.

1. தேநீர்
2. வெந்நீர்
3. தண்ணீர்
4. நீர்

( )

10. நல்லவன் என்று பெயர் ______________ நாள் செல்லும்.

1. வைக்க
2. கொடுக்க
3. எடுக்க
4. அளிக்க

( )

11. எண்ணும் ________________ கண்ணெனத் தகும்.

1. எழுத்தும்
2. மொழியும்
3. சொல்லும்
4. கருத்தும்

( )

12. நிழலின் அருமை வெயிலில் __________.

1. தெரியும்
2. புரியும்
3. மறையும்
4. தோன்றும்

( )

*B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்*

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

மன்னர் ஒருவர் தன் சேவகர்களுடன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றார். அவர் இளவரசனையும் தன்னுடன் அழைத்துப் போனார். இளவரசனுடன் சேவகர்கள் விளையாடி மகிழ்ந்தனர். மன்னன் வேட்டைக்குச் செல்லும்போது, தன்னையும் அழைத்துப் போகும்படி இளவரசன் கெஞ்சினான். ஆனால், மன்னர் அதற்கு *இசையவில்லை.* ஆதலால், இளவரசன் ஒரு முயலுடன் விளையாடிக்கொண்டு இருந்தான். முயல் மலையை நோக்கி ஓடியது. இளவரசனும் அதைத் துரத்திக்கொண்டு ஓடி, அம்மலையின் உச்சியை அடைந்துவிட்டான். சேவகர்கள் அவனைப் பின்தொடர்ந்தனர். ஆனால், அவர்களால் விரைவாக ஓட முடியாததால், சேவகர்கள் இளவரசனைத் தொலைத்துவிட்டனர்.

திடீரென்று இளவரசன் பின்னால் திரும்பிப் பார்த்தபோது, சேவகர்களைக் காணவில்லை. இளவரசன் பதற்றம் அடைந்தான். உடனே அவன், தன் தந்தை கூடாரம் அமைத்திருக்கும் இடத்திற்குத் திரும்பினான். இருள் கௌவத் தொடங்கியது. இருட்டிலேயே இளவரசன் மெதுவாக நடந்தான். அவ்வேளையில் இளவரசன் கால் இடறிப் பள்ளத்தில் விழுந்தான். அச்சமயம், அவன் கையில் ஏதோ ஒரு மரவேர் தட்டுப்பட்டது. அதை அவன் *கெட்டியாகப்* பிடித்துக்கொண்டு தொங்கினான்.

சிறிது நேரம் ஆனதும், அவனுக்குக் கை வலித்தது. இளவரசன் வேரை விட்டுவிடலாமா என யோசித்தான். வேரை விடப் பயந்து, பலமாகப் பிடித்துக்கொண்டான். பொழுது விடிந்தது. மெல்ல மெல்ல வெளிச்சம் பரவியது. இளவரசன் கீழே பார்த்தபோது, அதிர்ந்துவிட்டான். அவன் குதிக்க முடிந்த உயரத்தில்தான் தரை இருந்தது! இளவரசனின் *களிப்பிற்கு* அளவே இல்லை! ‘தொப்’ என இளவரசன் வேரை விட்டுவிட்டு, கீழே குதித்தான். அவன் உடனே, தந்தையின் கூடாரத்தை நோக்கி ஓடலானான்.

அவனது காலடி ஓசையைக் கேட்ட மன்னர், “மகனே!” எனக் கூவிக்கொண்டே இளவரசனைக் கட்டி அணைத்தார். மன்னன் ஆனந்தக் கண்ணீர் விட்டார். மன்னரும் இளவரசரும் கொஞ்சம் பழரசத்தைப் பருகி, இளைப்பாறினர். அதன்பின், பொழுது சாய்வதற்குள், மன்னனும் இளவரசனும் பல்லக்கில் ஏறி அரண்மனையைச் சென்று அடைந்தனர்.

(அம்புலிமாமா ஜனவரி 09 கதைத் தழுவல்)

*Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS, விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)*

13. மன்னர் வேட்டையாடும்போது இளவரசன் என்ன செய்து கொண்டிருந்தான் ?

(1) தானே ஓடிப்பிடித்து விளையாடிக்கொண்டு இருந்தான்
(2) முயலுடன் விளையாடிக்கொண்டு இருந்தான்
(3) சேவகர்களுடன் விளையாடிக்கொண்டு இருந்தான்
(4) மன்னனுடன் வேட்டையாடச் சென்றான்

( )

14. இளவரசன் மலை உச்சியை எவ்வாறு அடைந்தான் ?

(1) இளவரசன் சேவகர்களை விரட்டிச் சென்றபோது
(2) சேவகர்கள் இளவரசனை விரட்டிச் சென்றபோது
(3) இளவரசனை முயல் விரட்டிச் சென்றபோது
(4) இளவரசன் முயலை விரட்டிச் சென்றபோது

( )

15. இளவரசன் பதற்றம் அடையக் காரணம் என்ன ?

(1) முயல் ஓடோடிக் காணாமற் போனதால்
(2) சேவகர்கள் இளவரசனைப் பின்தொடர்ந்ததால்
(3) இளவரசன் மலை உச்சியை அடைந்ததால்
(4) சேவகர்கள் இளவரசனைப் பின்தொடராததை உணர்ந்ததால்

( )

16. இளவரசனின் கைகள் எதனால் வலித்தன ?

(1) மர வேரைத் தொட்டதால்
(2) மரவேர் கையை வெட்டியதால்
(3) மர வேரைப் பிடித்துத் தொங்கியதால்
(4) பள்ளத்தில் விழுந்ததால்

( )

17. மன்னன் ஏன் ஆனந்தக் கண்ணீர் விட்டார் ?

(1) இளவரசனைக் கட்டித் தழுவியதால்
(2) இளவரசனைக் கண்டு பிடித்ததால்
(3) இளவரசனைக் காணாததால்
(4) இளவரசனின் களைப்பைப் போக்கியதால்

( )

## *B4 சொற்பொருள்*

*Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS, விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.*
***(6 மதிப்பெண்கள்)***

*அடியிற்காணும் சொற்களுக்கான சரியான பொருளுக்குரிய எண்ணை OAS, விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு (6ம)*

18. இசையவில்லை

(1) சம்மதிக்கவில்லை
(2) அசையவில்லை
(3) விரும்பவில்லை
(4) வரவேற்கவில்லை

( )

19. கெட்டியாக

(1) கடினமாக
(2) இறுக்கமாக
(3) இலேசாக
(4) அவசரமாக

( )


20. களிப்பிற்கு

(1) கலக்கத்திற்கு
(2) களைப்பிற்கு
(3) ஆனந்தத்திற்கு
(4) ஆச்சரியத்திற்கு


( )

கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:



# தமிழ் மொழி வாரம்



## நோக்கங்கள்


- மக்கள் சரளமாகத் தமிழில் பேசுதல்
- இளையர்கள் தமிழில் ஆர்வம் காட்டுதல்
- ஓர் இந்தியர் மற்றோர் இந்தியரைச் சந்திக்கும்போது தமிழில் பேசுதல்



யூ டீ சமூக மன்றம் நடத்தும் இந்தக் கதை சொல்லும் போட்டியில் கலந்துகொள்ள அனைவரும் வரவேற்கப்படுகின்றனர்.

பற்பல நிகழ்ச்சிகள் நாடெங்கும் நடைபெறுகின்றன. தமிழ் நற்பணிக் குழுக்கள் இணைந்தும் தனித்தனியாகவும் நிகழ்ச்சியை நடத்துகின்றன. இதில் சிறுவர்களும் பெரியவர்களும் கலந்துகொள்ள ஆர்வம் ஊட்டப்படுகின்றனர்.

எதிர் வரும் ஏப்ரல் 23ஆம் தேதி காலை 9.00 மணிக்குத் தொடங்கி மதியம் 1.00 வரை நடைபெற இருக்கிறது.



21 முதல் 23வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. **ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.** (6 மதிப்பெண்கள்)

21. நாடெங்கும் தமிழ் மொழி வாரம் நடைபெறுவதின் குறிக்கோள் என்ன ?

(1) மக்களுக்குப் போட்டிகள் நடத்துவது
(2) மக்களின் கலைத்திறன் ஆர்வத்தை வளர்த்தல்
(3) மக்கள் கதைசொல்லும் திறன் பெறுதல்
(4) மக்கள் தமிழில் சரளமாகப் பேசுதல் ( )

22. யூ டீ சமூக மன்றம் படைக்கும் நிகழ்ச்சி என்ன ?

(1) பற்பல போட்டிகள்
(2) நாடகப்போட்டிகள்
(3) பேச்சுப்போட்டிகள் ( )
(4) கதைசொல்லும் போட்டி

23. தமிழ் மொழி வாரம் சிறப்பாக நடைபெற எவை உதவுகின்றன ?

(1) பல நிறுவனங்கள்
(2) சிங்கப்பூர் அரசாங்கம்
(3) தமிழ் நற்பணி மன்றங்கள் ( )
(4) தமிழ் இயக்கங்கள்

‘ஆ’ பிரிவு

## 6. ஒலிவேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கான பொருத்தமான ஒலிவேறுபாட்டுச் சொற்களைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்பினுள் எழுது. **(10)**

24. அருணா சந்தைக்குச் சென்று காய்கறிகள் வாங்கினாள். அவள், அம்மா சமைக்க அவற்றை ____________ வைத்தாள். 24.( )

25. திங்கள்கிழமை அன்று பள்ளி மண்டபத்தில் மாணவர்களுக்குக் கூட்டம் நடந்தது. அப்போது பள்ளி முதல்வர் டெங்கிக் காய்ச்சலைப்பற்றி ____________ நிகழ்த்தினார். 25.( )

26. ஒரு வாகனம் வேகமாக வந்து சாலையில் ஓடிய நாயின் மீது மோதியது. நாய் ____________ கத்திக்கொண்டே ஓடி மறைந்தது. 26 ( )

27. பவித்ராவின் தாயார் ஒரு தாதி. அவளும் அவரைப் போல ஒரு தாதியாக ____________ புரிய விரும்புகிறாள். 27 ( )

28. பொங்கல் திருநாள் தமிழர்களால் கொண்டாடப்படும் ஒரு விழா. மாட்டுப்பொங்கல் அன்று பசு மற்றும் ____________ மாடுகளை அழகாக அலங்கரித்து, பொங்கல் ஊட்டிவிடுவார்கள். 28.( )

| | | | |
|---|---|---|---|
| 1. அரிந்து | 2. பனி | 3. காளை | 4. உறை |
| 5. உரை | 6. அறிந்து | 7. வலியால் | 8. காலை |
| 9. வழியால் | 10. பணி | | |

**G** <u>முன்னுணர்வுக் கருத்தறிதல்</u> **(14 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.**

ஒருநாள் இரவு குமரனின் பெற்றோர் தங்கள் உறவினரின் திருமணத்திற்கு சென்றிருந்தனர். அதனால், குமரனும் அவன் தங்கையும் வீட்டில் தனியே (Q29)____________. அவர்கள் இருவரும் திரைப்படம் பார்த்துக்கொண்டிருந்தபோது திடீரென்று விளக்குகள் (Q30)____________. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தடைப்பட்டன. எங்கும் இருள் சூழ்ந்தது. (Q31)____________ வீட்டிற்கு வெளியில் யாரோ நடக்கும் சத்தம் கேட்டது. அதன் பிறகு, கதவு திறக்கும் சத்தம் கேட்டது. இருட்டில் எதையும் பார்க்க முடியாததால் யாரோ (Q32)____________ வருவதாக நினைத்து அவர்கள் பயந்து அலறினர். அதைக் கேட்ட அவர்களுடைய பெற்றோர் தாங்கள் வீடு (Q33)____________ கூறினர். மின்சாரம் தடைப்பட்டிருப்பதை அவர்கள் அறிந்தனர். சற்று நேரத்தில் (Q34)____________ மீண்டும் வந்தது. விளக்கு ஒளியை கண்ட குமரனின் தங்கை சிரிக்கத் தொடங்கினாள். இதற்காக (Q35)____________ எண்ணி குமரன் வெட்கப்பட்டான். 'தங்கைக்குத் துணையாக இருக்க வேண்டிய நீயே இப்படி அழலாமா?' என்று அவனுடைய அம்மா சொல்லிக்கொண்டே குமரனின் முதுகைத் தட்டிக்கொடுத்தார்.

Q29( )
Q30( )
Q31( )
Q32( )
Q33( )
Q34( )
Q35( )

| | | |
|---|---|---|
| 1. காணப்பட்டனர் | 2. அதனால் | 3. உள்ளே |
| 4. பிடித்துவிட்டது | 5. இருந்தனர் | 6. திரும்பியதை |
| 7. நின்றன | 8. பயந்ததை | 9. அணைந்தன |
| 10. சாதாரண | 11. அப்போது | 12. மின்சாரம் |

சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

பொம்மி, சும்மி என்ற இரு பறவைகள் ஒரு மரக்கிளையில் கூடுகட்டி நீண்ட நாட்களாக வாழ்ந்து வந்தன. ஒருநாள் அந்த மரத்தின் சொந்தக்காரனான கந்தன், மரத்தினடியில் நின்றுகொண்டு தன் வேலையாளிடம் பேசிக் கொண்டிருந்தான். மரம் இருக்கும் இடத்தில் அவன் பூந்தோட்டம் அமைக்கப்போவதாக வேலையாளிடம் கூறினான். அதனால், அந்த மரத்தை வெட்டிச் சாய்க்கும்படி வேலையாளிடம் தெரிவித்தான்.

இவர்களின் உரையாடலை அப்பொழுது மரத்தில் அமர்ந்திருந்த பொம்மி மட்டும் மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. மரம் வெட்டிச் சாய்க்கப்பட்டால் தானும் சும்மியும் கூட்டோடு அழிய வேண்டியதுதான் என்று எண்ணி மனம் வருந்தியது. இந்தச் செய்தியை எப்படியாவது சும்மியிடம் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணியது. உடனே பொம்மி சும்மியைத் தேடிப் பறந்தது.

சும்மி வயற்காட்டில் உள்ள புழு, பூச்சிகளைக் கொத்தித் தின்று கொண்டிருந்தது. பொம்மி மிகுந்த கவலையுடன் நடந்தவற்றைச் சும்மியிடம் கூறியது. மரத்தை வெட்டிச் சாய்ப்பதற்கு முன் வேறு இடம் தேடி சென்று விடுவோம் என்று பொம்மி சும்மியிடம் கூறியது. சும்மி பொம்மி கூறிய ஆலோசனைக்குச் சிறிதும் செவி சாய்க்கவில்லை. மேலும் எப்பொழுதும் வரும் முன் காப்போனாக இருக்கும், பொம்மியைக் கண்டபடி திட்டியது. பொம்மி மிகப் பொறுமையாக வரப்போகும் ஆபத்தைப் பற்றி எடுத்துச் சொல்லியும் சும்மி கேட்கவில்லை. "மரத்தை வெட்டிச் சாய்க்கும் போது பார்த்துக் கொள்ளலாம் ; நீ போய் வா," என்று பொம்மியை அங்கிருந்து விரட்டியது.

பொம்மி வரப்போகும் ஆபத்தை உணர்ந்து வேறு ஒரு மரத்திற்குச் சென்றது. ஆனால், சும்மியோ அதே மரத்தில் வாழ்ந்து வந்தது. மரத்தின் சொந்தக்காரன் சொல்லியபடியே வேலையாள் மரத்தை வெட்டிச் சாய்க்க வாளையும் கோடரியையும் எடுத்துக் கொண்டு வந்தான். சும்மி அவனைப்

பார்த்தது. பொம்மி சொன்னது அதற்கு நினைவுக்கு வந்தாலும் சும்மி அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. சும்மி மிக அலட்சியமாக மரக்கிளையிலேயே அமர்ந்திருந்தது. வேலையாள் அடிமரத்தை வாள் கொண்டு அறுத்தான். மரம் ஆட்டம் கண்டது. அப்பொழுதும் சும்மி அங்கிருந்து பறந்து செல்ல முயற்சி செய்யவில்லை. காற்றினால், மரம் அசைவதாக நினைத்துக் கூட்டிலேயே அமர்ந்து கொண்டிருந்தது. திடீரென்று மரம் மடமடவென்று சரிந்து விழுந்தது. அதை உணர்ந்த சும்மி பறந்து சென்றுவிட முயற்சித்த பொழுது மரக்கிளையினால் மோதுண்டு அங்கேயே இறந்தது.

Q1 முதல் Q6 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட <u>பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து</u> எழுது. (20 மதிப்பெண்கள்)

1. கந்தன் மரத்தை வெட்டக் காரணம் என்ன? (3மதிப்பெண்கள்)

2. பொம்மி ஏன் மனம் வருந்தியது? (4மதிப்பெண்கள்)

3. பொம்மி சும்மியைத் தேடிய பொழுது, சும்மி என்ன செய்துகொண்டிருந்தது? (4மதிப்பெண்கள்)

4. பொம்மியிடம் காணப்பட்ட சிறப்பு என்ன? (4மதிப்பெண்கள்)

5. மரம் ஏன் ஆட்டம் கண்டது? (2மதிப்பெண்கள்)

6. சும்மி இறந்ததற்குக் காரணம் என்ன ? (3மதிப்பெண்கள்)

முற்றும்

# P5 SA2
# TESTPAPER 8

ஓர் ஊரில் ஒரு காய்கறி வியாபாரி...

1) 2 2) 1 3) 3 4) 4 5) 2 6) 2

7) 2 8) 2 9) 4 10) 3 11) 1 12) 1

13) 2 14) 4 15) 4 16) 3 17) 2 18) 1

19) 2 20) 3 21)4 22)4 23) 3 24) 1

25) 5 26)7 27) 10 28) 3 29) 5 30) 9

31) 11 32) 3 33) 6 34) 12 35) 8

36. மரமிருந்த இடத்தில் பூந்தோட்டம் அமைக்க எண்ணியதே கந்தன் மரத்தை வெட்டக் காரணம் ஆகும்.

37. மரத்தை வெட்டும் போது தானும் சும்மியும் கூட்டோடு அழியப் போவதை எண்ணியதால் பொம்மி மனம் வருந்தியது.

38.பொம்மி சும்மியைத் தேடிய பொழுது சும்மி வயற்காட்டில் உள்ள புழு பூச்சிகளை கொத்தித் தின்று கொண்டிருந்தது.

39.பொம்மி வருமுன் காப்போனாக இருந்ததே அதனிடம் காணப்பட்ட சிறப்பு ஆகும்.

39.வேலையாள் அடிமரத்தை வாள் கொண்டு அறுத்ததால் மரம் ஆட்டம் கண்டது.

40.சும்மியின் அலட்சிய குணமே அது இறந்ததற்குக் காரணம் ஆகும்.